செம்மணி

நிலம் 3 துகள் 141 வள்ளுவர் ஆண்டு 2052, 01 - 07 சித்திரை 2023 வாரமலர் பக்கங்கள் 20



**மொழியாக்கம்**
**கமலநாதன்**

# "ஹெறந்த கொள்ள"



புலிகளுக்கு எதிராகப் போரில் ஈடுபட்ட படைச் சிப்பாய்களைச் செவ்வி கண்டு வெளியிடுவதே சிங்கள இனத்தவர்கள் இயக்கும் "வனச" என்கிற யூரியூப் தளத்தின் முக்கிய பணியாக இருந்து வருகிறது. அதில் புலிகளுக்கு எதிராகச் சிப்பாய்கள் எவ்வாறெல்லாம் போராடினார்கள், தம்மை அர்ப்பணித்தார்கள், கொடிய பயங்கரவாதத்தை எப்படி ஒழித்தார்கள், புலிகளின் நகர்வுகளை எப்படியெல்லாம் முறியடித்தார்கள், பல்லாயிரக்கணக்கில் புலிகள் சேர்ந்து தாக்கியபோது ஓரிருவராகக் களத்தில் நின்று தாக்கிய வீரச் செயல்கள் எனச் சிங்கள மக்களுக்குக் கதை சொல்வதாகவே பெரும்பாலான சிப்பாய்களின் செவ்விகள் அமைந்திருந்தன. மிகவும் கஸ்ரப்பட்டுத் தாம் அழித்தொழித்த புலிப் பயங்கரவாதம்போன்ற கொடிய பயங்கரவாதத்தை இனியும் உருவாகவிடக்கூடாது என்பதை உணர்த்துவதாக இந்தச் செவ்விகள் சிங்கள மக்களுக்குப் போதிக்கப்படுகின்றன.

சிறுகுழுவாக நின்று பெரும் குழுவுக்கு எதிராகப்போரிட்டு 3தசாப்தங்களுக்குள் பல வெற்றிகளை ஈட்டி, முடிவாக இரண்டு, மூன்று வருடங்களுக்குள் மாத்திரமே தோல்வியுற்று முடக்கப்பட்ட புலிகளின் பக்கத்தில் பெரும் வீரக் கதைகள் இருந்தாலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற இரும்புப் பூட்டால் அவர்களின் கதைகளை வெளியே சொல்ல முடியாமல் பூட்டிட்டு வைத்திருந்து சிங்களத் தரப்புத் தமது இரண்டு, மூன்று வருடகால வெற்றிக் கதையைப் பெரும் யுகம்போல காட்டி வரும் நிலையில், தற்போது அந்த "வனச" அணியினர் கிளிநொச்சிக்கு வந்து முன்னாள் போராளி ஒருவரைச் சந்தித்துச் செவ்வி கண்டு, புலிகள் எவ்வாறு போரை நடத்தினார்கள் என்ற விடயப்பரப்பில் உள்ளடங்கக்கூடிய சிறுதுகள் ஒன்றைச் சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்த ஆரம்பித்திருக்கிறார்கள். இதன்மூலம் இனிவரும் காலங்களில் சிங்கள மக்கள் எவ்வாறு விழிப்புடன் செயற்பட வேண்டும்

## கட்டுநாயக்கா வானூர்தி நிலையப் பகுதிக்கூடாகச் செல்லும் கழிவு வாய்க்காலுக்குள்ளால் சென்று அங்கு வானூர்தி நிலையத்துக்குள் நுழையத் தடையாக இருந்த முட்கம்பித் தடுப்பை வெட்டி அதனூடாக உள்ளே சென்று வேவு பார்த்தேன்

என்ற விடயத்தையும் தெளிவு படுத்த முனைந்திருக்கிறார்கள். புலிகளின் சாள்ஸ் வேவுப் பிரிவில் பணியாற்றிய ராமலிங்கம் குமார் (இயக்கப் பெயர் பொட்டு) என் பவரையே இவ்வாறு சந்தித்துச் செவ்வி கண்டுள்ளனர். சிங்கள மொழிப் பரீட்சயமுடைய ராம லிங்கம் குமார் தனது அனுபவங் களைச் சிங்கள மொழியில் கீழ் வருமாறு வனச தரப்பினருடன் பகிர்ந்துள்ளார்.

நான் கிளிநொச்சியில் பிறந்தேன். எனது சிறுவயதிலேயே பெற்றோர் இறந்துவிட்டதால் செஞ்சோலை யில் சேர்க்கப்பட்டேன். அங்கு மாதத்துக்கு ஒருதடவை தலைவர் வருவார். ஏனைய போராளிகள் புலிகளின் படைச் சீருடையில் அங்கு வருவார்கள். அதைக் கண்டு எனக்கு இயக்கத்தில் சேரவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நான் இயக்கத்தில் சேர்ந்தபோது புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர்களில் ஒருவரான சாள்ஸின் அணியில் சேர்க்கப்பட்டேன். எனது அணியில் 12பேர் இருந்தார்கள். அதில் ஆண்களும் பெண்களும் கலந்திருந்தார்கள். நாங்கள் கொழும்பில் புலனாய்வு வேலைகளைச் செய்வ தற்குப் பயிற்றப்பட்டோம். எமக்கு வகுப்புகள் நடக்கும் போது வெள்ளை நிறக் காலுறை போன்ற ஒன்றால் எமது முகத்தை மறைத்து வெளியே பார்ப்பதற்காகக் கண்க




ளுக்கு நேராக அதில் துவாரம் விடப்பட்டிருக்கும். எங்க ளுக்குச் சாள்ஸைத் தெரியும். ஆனால் எங்கள் ஒரு வருக்கும் எங்களில் மற்றவர்களை யார் என்று அடை யாளம் தெரியாது. பயிற்சியில் இந்த முகமூடி அணிவது மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி 3வருடங்கள் நடந்தது. கைத்துப்பாக்கியால் சுடும் பயிற்சி, 4 நாள்கள் தொடர்ச்சியாகப் பட்டினி கிடப்பது. ஒரே உடுப்பைத் தோய்க்காமல் ஒரு மாதம் வரை அணிவது, அதிகாலை 4 மணிக்குத் தண்ணீருக்குள் இறங்கி நீண்ட நேரம் இருப்பது, ஒரு நாளைக்குக் குறைந்தது 5கிலோமீற்றர் தூரம் நடக்கவும் பயிற்சி வழங்கப்பட்டது. இவ்வாறான பயிற்சிகள் ஏன் வழங் கப்படுகின்றன என்று அப்போது எனக்குத் தெரிந்திருக்க வில்லை.

### மீரிகம எண்ணை ஆலையில் வேலை

பயிற்சிகள் முடிந்தபின் நான் மீரிகம என்ற இடத்தில் தேங்காய் எண்ணை ஊற்றும் மில் ஒன்றில் வேலைக்குச் சேர்க்கப்பட்டேன். அந்த மில் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமானது. அங்கு பணி புரிந்தவர்கள் அனைவரும் சிங்க ளவர்களாக இருந்தனர். எனக்கோ சிங்களம் தெரியாது. அதனால் பெரும் சிரமப்பட்டேன். அப்போது எனக்குப் 14 வயது. அங்கு சிறு சிறு வேலைகள் செய்ய விட்டார்கள். என்னுடன் தொடர்பில் இருந்தவர் என்னை வந்து சந்தித்த போது, எனக்குச் சிங்களம் தெரியாததால் இங்கு இருக்க முடியாதுள்ளது என்று கூறினேன். அத ற்கு அவர், உன்னைச் சிங்களம் படிக்கத்தான் இங்கு விட்டிருக்கிறோம். எப்படியாவது சிங்களம் பேசக் கற்றுக்கொள் - என்றார். பின்னர் அந்த எண்ணை ஆலையில் வேலை செய்பவர்களுடன் சேர்ந்து கதைத்துப் பழகிக் காலப்போக்கில் சிங்க ளம் பேசக் கற்றுக்கொண்டேன்.

### தியத்தலாவ படை முகாமுக்குள் வேலை

அப்போது எனக்குப் 16 வயது. தியத்தலாவவில் படை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும் படை முகாமில் உணவுப் பொருள்களை வழங்கும் ஒப்பந்தகாரராக மடார் என்ற முஸ்லிம் நபர் இருந்தார். அவருடன் சேர்ந்து வேலை செய்தேன். அப்போது எனக்குச் சிராஜ் என்ற முஸ;லிம் பெயர் சூட்டப்பட்டு அந்தப் பெயரிலேயே அடையாள அட்டையும் செய்து தரப்பட்டது. எனது ஊர் பதுளை என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. யார் கேட்டாலும் எனது பிறந்த இடம் பதுளை என்று நானும் சொல்வேன். அப்போது சிங்களம் நன்கு பேசக்

கற்றுக்கொண்டுவிட்டதால் அந்த முகாமுக்குள் வேலைகள் செய்யமுடிந்தது. இதனால் சிப்பாய்கள், அதிகாரிகள் மட்டத்தில் என்னைக் ஹொந்த கொள்ளா (நல்ல பையன்) என்றழைக்கும் பழக்கம் இருந்தது. படை அதிகாரிகளே என்னைப் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்வார்கள். எனது பணியாக, அந்த முகாமுக்குள் எங்கு பயிற்சி நடக்கிறது, முகாமுக்குள் நுழையக்கூடிய வழிகள் எங்கிருக்கின்றன, அங்கிருந்து இலகுவாக வெளியேறும் வழிகள் எங்குள்ளன ஆகிய விடயங்களை வேவு பார்ப்பது இருந்தது.
படை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் இடம் நரியா கந்த என அழைக்கப்பட்டது. மலைப்பாங்கானதும்

**கொழும்பு நகரில் பிச்சை எடுத்தேன்**
பண்டாரவளையில் இருந்து கொழும்பு நகருக்கு முகவர் மூலம் மாற்றப்பட்டேன். கொழும்பு ரயில் நிலையம், காலிமுகத்திடல் பகுதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டு வேவுத் தகவல்களைச் சேகரித்தேன். தங்குவதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி வெவ்வேறு இடங்களில் படுத்துறங்கினேன். மேலிடத்துப் பணிப்பிற்கிணங்க மத்திய வங்கித் தாக்குதலுக்கான வேவுப் பணிகளை மேற்கொண்டேன். எனது தகவல்களை உறுதிப்படுத்திய பின் றெக்கி ரீம் அவற்றைப் பரிசீலித்துப் பார்த்தது. பின்னர் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தினார்கள்.



ஆறு மற்றும் பல விடயங்கள் அங்கிருந்தன. அந்த இடங்களின் வரை படங்களைக் கீறி அனுப்புவது மற்றும் அவர்களுக்குப் பயிற்சி முடிந்த பின்னர் அதையொட்டி நடக்கும் நிகழ்வு எப்போது, எங்கே நடக்கிறது போன்ற வேவுத் தகவல்களை அனுப்புவது என எனது பணிகள் இருந்தன. இதுபோன்ற பல தகவல்களை சாள்ஸ்சுக்கு அனுப்பி வைத்தேன். எனக்கு வழங்கப்பட்ட பணி தாக்குதல் நடத்துவதல்ல. தாக்குதலுக்கான வேவுத் தகவல்களை அனுப்புவது மட்டுமே.

**பிச்சை எடுக்கும் தொழில்**
பண்டாரவளைப் பகுதியில் என்னுடன் பயிற்சி பெற்ற 11பேரும் பிச்சை எடுப்பவர்களாக இறக்கப்பட்டோம். அதில் ஒரு பெண் போராளி பிச்சை எடுத்துவிட்டு மலசலகூடம் ஒன்றுக்குள் சென்று தொலைபேசியில் பேசியதைப் படைப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுவிட்டனர். அதனால் அவரைக் கைது செய்தார்கள். அப்போது தன்னிடமிருந்த வரைபடத்தை மலசலகூடத்துக்கு வெளியே பின்புறமாக அவர் எறிந்திருந்தார். பின்னர் நான் அவற்றைச் சேகரித்து சாள்ஸ்சுக்கு அனுப்பி வைத்தேன்.

**கட்டுநாயக்கா வானூர்தி நிலையத் தாக்குதல்**
கட்டுநாயக்கா வானூர்தி நிலையப் பகுதிக்கூடாகச் செல்லும் கழிவு வாய்க்காலுக்குள்ளால் சென்று அங்கு வானூர்தி நிலையத்துக்குள் நுழையத் தடையாக இருந்த முட்கம்பித் தடுப்பை வெட்டி அதனூடாக உள்ளே சென்று வேவு பார்த்தேன். இந்த வேவுப் பணியை இரவு நேரத்திலேயே செய்தேன். அந்த நாட்களில் பிச்சைக் காரனாகப் பஸ் தரிப்பு நிலையத்தில் படுத்து எழும்புவேன். இத்தகைய எனது நடவடிக்கைகளுக்குச் சிங்கள, முஸ்லிம் நபர்கள் பலர் உதவியிருக்கிறார்கள். இவ் வேவுப் பணிக்காக 8 மாதங்கள் வரை இரவில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்துக்குள் சென்று வந்தேன். ஒரு நாள் கூடப் பிடிபடவில்லை.
இறுதிப்போர் முடிந்த பின் மறுவாழ்வளிக்கப்பட்டு 2011.6.2ஆம் திகதி விடுவிக்கப்பட்டேன். பின்னர் கிளிநொச்சியைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதியிடம் சென்று உதவிகேட்டேன். அவர் எந்த உதவியும் செய்யவில்லை. உணவுக்குக் கஸ்ரப்படும் சூழலில் படையினரிடம் தொழில் கேட்டுச் சென்றேன். அவர்கள் உணவு தந்து தொழில் ஏற்பாடும் செய்து தந்தார்கள்.

# திருட முடியாத நிலையில் எமது திருடன்



எட்வின் றூள்ஸ்

2022ஆம் ஆண்டை இலங்கையர்களால் இலகுவில் மறந்துவிட முடியாது. இலங்கை ஆட்சியாளர்களாலும்தான். பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு சிக்கித் தத்தளித்ததால் ஆட்சியாளர்கள் துரத்தியடிக்கப்பட்டனர். போர்ச் செலவு, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், கொவிட் பரவல், இத்தோடு ஆட்சித்தரப்பினரின் ஊழல் மற்றும் கொள்ளை ஆகியனவே இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணங்களாக இருந்தன. ஆட்சிப் பீடத்தில் இருந்த ராஜபக்ச குடும்பமே இதற்குக் காரணம் என்பதால் அந்தக் குடும்ப ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் ஆரம்பமாHனது. ஏப்ரல் மாதம் 9ம் திகதியன்று அது பெரும் போராட்டமானது. காலி முகத்திடலில் ஒன்று கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள், கோட்டாபய, மகிந்த உள்ளிட்ட ராஜபக்ச குடும்பத்தினர் மாத்திரமன்றி, முழு அரசையும் பதவி விலகுமாறு வலியுறுத்தினர். ஜூலை மாதம் 9ஆம் திகதி வரலாறு காணாத வகையில் லட்சக்கணக்கான மக்களின் முற்றுகையால் கோட்டாபய ராஜபக்ச நாட்டை விட்டுத் தப்பி ஓடினார். பின்னர் அதே மாதம் 14ஆம் திகதி தனது பதவி துறப்பை அறிவித்தார்.

**போராட்டத்தின் பின்னர் போராட்டக்காரர்களின் நிலை**

கோட்டாபய ராஜபக்ச தப்பியோடி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்னர் போராட்டக் களத்தில் முன்னின்ற பலர் கைது செய்யப்பட்டனர். போராட்டக் காளொலிக் காட்சிகள், ஒளிப்படங்களை வைத்தும் பலர் கைதாகினர். பேராட்டக் களத்தில், வீடுகளில், வீதிகளில், வானூர்தியில் பயணிக்கவிருந்த நிலையில் எனப் பலர் கைது செய்யப்பட்டனர்.

**போராட்டத்துக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்களின் செயல்கள்**





மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து நாட்டைக் குட்டிச்சுவராக்கினார்கள் என்ற கோசமே முன்னைய ஆட்சியாளர்களைத் துரத்தியடிப்பதற்கு வலுவாக இருந்தது. இதனால் பின்வந்த ஆட்சித்தரப்பினர் இதில் மிகக் கவனமாகவே செயற்பட்டனர். ஊழல் மற்றும் வரிப்பணச் சுரண்டல், கொள்ளையடிப்புப் போன்ற கறைகள் தம்மீது விழுந்து விடாதபடி பார்த்துக்கொள்வதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். ஆனாலும் இயல்பில் கொள்ளையடிப்புக் குணம் கொண்டவர்களாகவே இவர்கள் இருக்கின்றனர்.

**கவனிக்கத்தக்க கருத்து**

அரசைக் கவிழ்த்த போராட்டத்தில் முன்னின்று போராடி, வானூர்திக்குள் வைத்துக் கைது செய்யப்பட்ட டானிஸ் அலி ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் கருத்துத் தெரிவித்தபோது, தலைவர் திருடனாக இருந்தாலும், திருட முடியாத மாற்றத்தை ஏற்படுத்துவதே தமது கொள்கை என்றிருக்கிறார். அவர் குறிப்பிடும் தலைவர் வேறு யாராகவும் இருக்கமுடியாது. தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே.

**இனப்பிரச்சினைக்கும் தீர்வு வேண்டும்**

இது தவிர இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முக்கியம் என்றொரு கருத்தையும் அவர் அந்த ஊடகக் கருத்தில் வெளிப்படுத்தியிருந்தார். 13, 13 பிளஸ் எல்லாமே முன்னோக்கி கொண்டு செல்லப்படவேண்டும் என்றும் 13க்கு அப்பாற்பட்ட சட்டத்தை பற்றி நாங்கள் பேசுகின்றோம். ஆனால் குறைந்தது 13 சரி வர வேண்டும். வடக்குக் கிழக்குப் பகுதிகள் அரசியலமைப்பு ரீதியாகப் பிரிக்கப்படாவிட்டாலும், அரசியல் ரீதியாகவும் மொழி ரீதியாகவும் பிரிந்துதான் இருக்கின்றோம். பிரிவினையை இன்னும் பிரிவினையாக உருவாக்காமல், அவர்களுக்கு சுயமாக இயங்குவதற்கான அமைப்பொன்றை செய்துகொடுத்தால், பிரச்சினை இல்லாமல் சந்தோசமாக ஒன்றாக வாழ முடியும். ரணில் போக வேண்டும் என்பது குறிக்கோளாக இருக்கிறது. ரணில் சரி வராது. கை, காலை பிடித்து, ஐ.எம்.எப் உதவியை பெற்றுக்கொண்டுள்ளார்கள். 13 பிளஸ் தேவை. ஏன்றாலும் இப்போது குறைந்தது 13ஆவது தர வேண்டும் என்பதே எமது கோரிக்கை' என்றுள்ளார். அவர் சொல்வதுபோல பொருளாதாரத்தை நிமிர்த்தியதுடன் தனது பணி முடிந்துவிட்டது என்று ரணில் விக்கிரமசிங்கவும் தனது ஆட்சிக்காலத்தை நகர்த்திச் செல்வாரானால் நாட்டின் எதிர்காலம் இருள் படிந்தேயிருக்கும் என்பதே நிஜம்.




தர்மராசா

# சிறைக்குள்...

## கைதிகள் படிப்படியாக விடுதலை


அநுராதபுரச் சிறையில் மன்னாரைச் சேர்ந்த குருஸ் என்ற தமிழ்ப் பொறுப்பதிகாரி ஒருவர் இருந்தார். அவரை மதுபோதையில் லாமல் கண்டதேயில்லை. அவர் யாருக்கும் பயப்பிடுவதோ பணிந்துபோவதோ இல்லை. சிறைச்சாலை அவரது தலைமையில் இருப்பது போல மிகச் சுதந்திரமாக நடந்துகொள்வார். சிங்களம், தமிழ், தூசணம் ஆகிய மும் மொழி களிலும் நன்கு தேர்ச்சிபெற்றிருந்தார்.

நான் அனுராதபுரச் சிறைக்குள் சென்றதும் மோரா என்ற நெடுந்தீவு நண்பர் முதல் நாள் அனுராபுர நீதிமன்றில் விடுவிக்கப்பட்டார் என்று அறிந்தேன். அவர் களுத்துறை, பூசா ஆகிய சிறைகளில் என்னுடன் ஒன்றாக அடைக்கப்பட்டிருந்தவர். அவர் பூசாவில் அடைக்கப்பட்டிருந்த 2001ஆம் ஆண்டில் அவரது தந்தை நெடுந்தீவில் இறந்தார் என்று செய்தி வந்தது. மிகவும் துன்பப்பட்டார். நாங் கள் அவருக்கு ஆறுதல் கூறினோம். புத்தகம் வாசிப்பதில் அதிக அக்கறையுள்ளவர். திரு மணமாகி இரண்டு குழந்தைகளும் இருந்தன. திருமணமாகிக் குழந்தைகள் உள்ள பலர் ஒன்றாகச் சேர்ந்து தமது பிள்ளைகளின் ஏக்கம் பற்றிக் கதைப்பதுண்டு. களுத்துறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அவரும் எம்முடன் கூட இருந்தார். அவர் விடுவிக்கப்பட்டது மகிழ்ச்சியாக இருந்தது.

பொதுவாகக் கைதிகள் எல்லோரும் இலங்கை அரசிடம் தமது உடலைச் சிறை வைக்கக் கொடுத்து விட்டு மனசால் வெளியுலகில் மிதந்துகொண்டிருப்பர். விடுதலையின்போது மட்டுமே உடலையும் சேர்த்து வெளியே கொண்டுபோக முடியும்.

13.6.2002அன்று வவுனியா மேல் நீதி மன்றத்தால் 8பேரும் மன்னார் நீதிமன்றத்தால் ஒருவரும் விடுவிக்கப்பட்டனர் என்று அறிந் தோம். அனுராதபுரச் சிறIயில் 9பேரின் இடம் வெற்றிடமாக இருந்தது. வெற்றிடம் ஏற்படும் போது 9 குடும்பங்கள் மகிழ்ச்சியில் இருப்பார் கள் என்று உணரமுடிந்தது. அன்றைய இரவு 29பேர் வரையிலேயே அரசியல் கைதிகளாக அனுராதபுரச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டி ருந்தோம்.

மறுநாள் களுத்துறைச் சிறைக்குக் கொண்டு செல்லப்படவிருப்பவர்களின் பட்டியலில் 15.6.2002அன்று மாலை வரை எனது பெயர்



கதிரேசன் காத்தவராயன்

# புத்திசாலியள் எண்டது நாங்களல்லோ?

இரண்டொரு நாளைக்கு முன்னம் அதிலை கோயிலடிக்குப் போயிருந்தன். அங்கை வல்லியம்மான், சங்கரியர், தம்பர், சம்பர் ஆக்கள் இருந்து கதைச்சுக்கொண்டிருந்தினம். பின்னேரப் பொழுது அஞ்சரைக்கும் மேலைதான் எண்டாலும் மத்தியானம்மாதிரி வெக்கை. என்னைக் கண்ட வல்லியம்மான் 'வாடாப்பா கதிரேசு... இந்த புழுக்கத்துக்கு ஒண்டுஞ் செய்யேலாதோ?' எண்டு கேட்டார்.

'ஏனம்மான் விசுக்கலாம்....தண்ணியை ஊத்திக்கொண்டிருக்கலாம்....'எண்டு நான் முடிக்கயில்லை சங்கரியர் இடைமறிச்சு 'அம்மான் தண்ணி ஊத்தியும் தணியாத வெக்கையல்லே இது?' எண்டதுக்கு எல்லாருமாச் சிரிச்சம். அம்மானுந்தான். 'இஞ்சையேபாரன் வீதியை அகட்டிறம்.. புதிசாய் கட்டிடம் கட்டிறமெண்டு உதிலை நிண்ட அரச மரமுமில்லை...அதிலை நிண்ட வேம்புமில்லை எண்டல்லே ஆகிப்போச்சுது வெக்கையில்லாமல் என்னசெய்யும்?' எண்டார் சம்பர் எரிச்சலோடை.

'சம்பண்ணை அரச மரம் நிண்டிருந்தால் உன்ரை பல்லின்ரை களறிலை உடுப்போடை ஆக்கள் வந்திருப்பினம்... போயாவுக்கு பாற்சோறும் கிடைச்சிருக்கும்' எண்டு சங்கரியர் சொல்ல 'என்னப்பா சங்கரி நீ... உனக்கும் வில்லண்ட அரசியல் நல்லா வருகுது...' எண்டு நான் சொல்ல 'எடப்பா கதிரேசு எல்லாம் இப்பதானே விளங்குது...இருந்து பாருங்கோவன் கடனிலை என்னவெல்லாம் நடக்கப்போகுதெண்டு' எண்டு நிப்பாட்டினார் வல்லியம்மான்.

'என்னப்பா கடன் கதைதான் போகுது போலை...??' எண்டபடி முருகேசர் வந்து இருந்துகொண்டார். 'பின்னையென்ன முருகேசு? கடனைப்பட்டனாங்கள் தொழல் துறையெண்டு முன்னேறுகிற பாடாய்க் காணேல்லை...' எண்டு வல்லியம்மான் சொல்லிக்கொண்டிருக்க சம்பர் இடைமறிச்சு 'அரசியலுக்கு முதல் போடுப்படுகுதல்லே?' எண்டார்.

இருக்கவில்லை. அதில் பெயர் இடம்பெறவேண்டியிருந்ததால் திருகோணமலையில் இருந்து வந்தவர்கள் எமது கொமிற்றலை எங்காவது மாறி வைத்துவிட்டார்களோ தெரியாது என்று விவரம் எழுதிப் பாட்டிக்காரனிடம் கொடுத்தேன். மறுநாள் காலையில் 12பேரைக் களுத்துறைச் சிறைக்குப் போவ தற்காக வெளியே எடுத்தார்கள். ஆனால் எனக்கு அழைப்பில்லை. சிறைச்சாலைப் பதிவுப் பகுதியில் ஏற்பட்ட தவறால் அன்றைய எனது பயணம் தடைப்பட்டது.

அரசியல் கைதிகள் திறக்கப்படும்போது வெளியேயுள்ள சிவில் கைதிகளுடன் உரையாடும் சந்தர்ப்பம் இருக்கும். அப்போது அங்கு ஒரு சிவில் கைதி லெமன் பப் பிஸ்கட் பெட்டி ஒன்று தருகிறேன் பதிலாகச் சவர்க்காரம் தருவீPர்களா என்ற கேட்டார். சிறைக்குள் ஒரு சவர்க்காரம் 10ரூபா பெறுமதி கொண்டது. பிஸ்கட்பெட்டி ஒன்று 35ரூபா பெறுமதி. அதை அவர்களுக்கு விசிற் வந்த யாரோ கொடுத்திருக்க வேண்டும். எங்கள் சங்கத்தின் சார்பில் இரண்டு சவர்க்காரங்களைக் கொடுத்து அதை வாங்கினோம். அவர்கள் அந்தச் சவர்க்காரத்தைக் கொடுத்து கஞ்சா அல் லது கெரோய்ன் வாங்குவார்கள். அவர்கள் குளிக் காமல் இருப்பார்கள், ஆனால் அந்த நச்சுப் பொருள்களைக் குடிக்காமல் இருக்கமாட்டார்கள். அனுராத புரச் சிறையில் சவர்க்காரம் பணத்துக்குப் பதிலாகப் பாவிக்கப்படும் ஒரு பண்டாமற்றுப் பொருளாக இருந்தது. இங்கு நடைமுறையில் இருப்பது திறந்த பொருளாதாரமா? மூடிய பொருளாதாரமா? என் பதைவிட தேவையின் அடிப்படையில் நிர்வகிக்கப்படும் ஒரு வகைப் பொருளாதார முறைமையாக இருந்தது.

16.6.2002அன்று பகல் உணவின்போது மூத்திரச் சுறாக் கறி சமைச்சுத் தந்தார்கள். பலர் அதை எடுக்கவேயில்லை. நான் வாங்கினேன். அந்த மீன் அன்று சாப்பிட்டால்தான். ஏன் எனில் வீட்டில் அதை வாங்கிச் சமைக்க மாட்டார்கள். பாட்டிக்காரர் அதை அரைகுறையாக அவித்துப் புளி ந்த தேங்காய்ப்பூவும் போட்டு ஒரு வறைபோல கிண் டிக்கொண்டு வந்தார்கள். அது மிகவும் துன்பமான சாப்பாடாகத்தான் இருந்தது.

17.6.2002அன்று களுத்துறையிலிருந்து ரவி என்ற கைதியைத் திருகோணமலையில் வழக்குக்குக் கொண்டுடசெல்வதற்காக அனுராதபுரத்துக்குக் கொண்டுவந்தார்கள். என்னை அந்த வாகனத்தில் களுத்துறைக்கு ஏற்றக்கூடும் என்று நினைத்து அது பற்றி ரவியிடம் விசாரித்தேன். இங்கிருந்து யாரை யாவது களுத்துறைக்குக் கொண்டுபோக வேண்டும் என்று சிறைச்சாலை ஊழியர்கள் கதைத்தார்களா? என்று கேட்டேன். அதற்கு ரவி, என்னைப் போன கிழமையே இங்கு கொண்டு வந்திருக்க வேண்டும். நான் வழக்குக்குப்போக வேண்டும் என்று சிறை நிர்வாகத்திடம் கூறிய போது அவர்கள் அதைக் கணக்கில் எடுக்கவில்லை. இன்று களுத்துறை எஸ்.பியின் குடும்பத்தவர்க ளுக்கு (குருநாகல் சந்திக்கு அருகில் அவரது வீடு உள்ளது) வான் தேவைப்பட்டதால் அதில் என் னைப் பதிந்து கொண்டுவந்தார்கள். எஸ்.பியும் அவரது குடும்பத்தவர்களும் வானில் வந்து வீட்டில் இறங்கிவிட்டார்கள். என்னை இங்கு கொண்டுவந்தவர்கள் உடனேயே குருநாகல் போகிறார்கள் என்று கூறினார்.

(தொடரும்)

'என்ன?.... என்ன? அரசியலுக்கு முதல் எண்டிறது விளங்கேல்லை' எண்டு தம்பர் ஆவலானார். 'என்ன தம்பு? இது குழந்தைப் பிள்ளை விசயம்...சனம் காசுக் கஸ்ரமெண்டி றதை மறக்கடிக்க வேறையேதாலும் தேவை யல்லே? எனி எங்கடையாக்களுக்கும் கதைக் கிறதுக்கு விசயம் கிடைச்சிருக்கல்லே?' எண்டு முருகேசர் எல்லாரையும் ஒரு பார்வை பாத் தார். அதுக்குள்ளை நிறைய அர்த்தங்கள் இருந்துது.

'ஓமோம் முருகேசு சொல்லுறதுதான்.... சாமானுகளின்ரை விலையளை உச்சத்திலை கூட்டி இப்ப கொஞ்சம் குறைச்சாச்சு... முந் தின விலையை விட சரியாக் கூடத்தான் இப்ப குறைக்கிற விலையளும் இருக்கு..இல் லையோ?' எண்டார் சம்பர். 'பங்கார் விசயத் தைப் பிடிச்சிட்டாய்.... உதுதான்... உதைக் கண்டு பிடிச்சிடக் கூடாதல்லே? அதுக்குத்தான்... அதுக்குத்தான் கச்சதீவும் நெடுங்கேணியும்... ஏனடாப்பா எங்கடை அரசடிக்கும் வரலா மல்லே?' எண்டார் நிதானமாக வல்லியம்மான்.

'அது சரியப்பா உதுகள் பெரிய இடங்க ளைக் காப்பாற்றுகிற திட்டங்கள்... அதுகளை விடப்பா...தேவையில்லாத சோலியாப் போகிடும்...'எண்டு சங்கரியர் தடுமாறினார். 'என்ன கதைச்சு இப்ப எங்கை நிக்கிறமெண்டு பாருங்கோவன்?' எண்டு சம்பர் சிரிச்சார். 'உண்மைதான் எங்கடை கோயிலடியிலை நிண்ட மரங்களைத் தறிச்சதிலை தொடங்கி பெரிய இடத்துச் சிக்கலிலை வந்து நிக்கிறம் பாத்தியளோ?' எண்டார் சங்கரியர் உற்சாக மாய்.

'எங்கடை மரங்களுக்குள்ளையும் பாருங் கோவன் எவ்வளவு கிடக்குத பாத்தியளே?' எண்டு நான் சொன்னதுக்கு வல்லியம்மான் 'கனக்கக் கிடக்குது... மரங்களை வெட்டிப் போட்டு குளிர்ச்சிக்கு எண்டு ஏசியும் காத்துக் கெண்டு பானும் வாங்கி இப்ப கறன்றுக்குக் கொஞ்சநஞ்சமே காசு கட்டிறம்?' எண்டு சிரிச் சார். சந்தோசச் சிரிப்பில்லை... விரக்திச் சிரிப் பாய்த்தான் அது இருந்துது.

'கோயிலுகள் றோட்டுகள் வளவுகள் எண்டு ஓடியோடி நிண்ட மரங்களையெல்லாம் வெட்டினதின்ரை பலனல்லே இந்த வெக்கை யும் புழுக்கமும்?' எண்டு தம்பர் சொல்ல 'ஒதிய மரத்தடியிலை தம்பன் ஞானம் பெற்றிட் டான்'எண்டு வல்லியம்மான் பிலத்தாச் சிரிச்ச படி எழும்ப தம்பரும் எழும்பினார். 'என்ன தம்பு வல்லியம்மானுக்கு நீதான் பொடிகாட் போலை?' எண்டு சங்கரியர் கேக்க 'இவனோ... அதைவிட நான் தனியப் போறதுதான் பாது காப்பு...வாடா தம்பா' எண்டு வல்லியம்மான் போகதயங்கினபடி தம்பரும் போனார்.

'நாங்கள் வலு கெட்டிக்காறர்...இல்லையோ? தலைக்கு மேலாலை போனபிறகுதான் வெள்ள மெண்ட ஒண்டையே கண்டு பிடிக்கிறம்... அப்ப மூச்சு முட்டி ஆள் முடிஞ்சிடும்' எண்டு கொண்டு நானும் எழும்பி வந்திட்டன்.

# "எல்லை நோக்கிச் செல்ல ஆட்களில்லை...."




சிங்கள அரசுகளின் தொடர் ஒடுக்குமுறைகளால் பாதிக் கப்பட்ட தமிழ் இளைஞர்கள் சிங்கள அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த காலம் அது. அப்போது அரச தலைவராக இருந்த ஜெ.ஆர். ஜெயவர்த்தனா சிங்கள மக்களுக்குச் சொன்ன விடயம் முக்கியமானது. அதாவது, "நாங்கள் எல்லை களை நோக்கிச் செல்லாவிட்டால், எல்லைகள் எங்களை நோக்கி வந்துவிடும்" என்கிற அறைகூவலே அப்போது அவர் அடித்த எச்சரிக்கை மணி. அந்த விடயத்தைச் சிங்களக் கிராம மக்களும், பௌத்த துறவிகளும், ஆயுதப் படைகளும் சிரமேற்கொண்டனர். அதை அவர்கள் இன்றுவரை மிகவும் கச்சிதமாகக் கையாண்டு வருகின்றனர். இது பற்றிய அறிவு தமிழ் அரசியல்வாதிகளிடம் இல்லை. இதைப் புரிந்துகொள்ளாது இருந்ததன் விளைவாலேயே வெடுக்குநாறி மலையிலிருந்த ஆதி லிங்கேஸ்வரர் கோவில் எச்சங்கள் அழிக்கப்படும் நிலமை நேர்ந்தது.

**ஜெ.ஆர். ஆரம்பித்த பாதுகாப்பு வேலி**

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் எல்லைப்புற மாவட்டங்க ளான அனுராதபுரம், புத்தளம், பொலநறுவை, மொனராகலை ஆகிய நான்கு மாவட்டங்களிலும் ஊர்காவல் படைகளை உரு வாக்குதல் என்ற பெயரில் தென்பகுதியிலிருந்து சிங்களக் காடை யர்களையும் சிங்களச் சிறைக் கைதிகளையும் கொண்டுவந்து குடியேற்றியது சிங்கள அரசு. அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் வழங்கியது. இதனால் குறித்த பகுதிகளில் பல சிங்களக் கிராமங் கள் ஊர்காவல் படைகளின் ஊர் களாக உருவாக்கப்பட்டன. பல குடும்பங்களில் கணவனும் மனை வியும் ஊர்காவல் படைகளில் பணியாற்றி மாதாந்த ஊதியம் பெற்றனர். இதற்கு மேலதிகமாக முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட் டங்களின் எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களும் பாதுகாப்புக்காக ஊர்காவல் படைக் கிராமங்கள்





ஆக்கப்பட்டன. வவுனியாவுக்கு அருகேயுள்ள இரட்டைப் பெரியகுளம் இவ்வாறு ஆக்கப்பட்ட கிராமங்களில் ஒன்றே. இவ்வாறான ஊர்காவல் படைக் கிராமங்களுக்குள் விடுதலைப் புலிகள் புகுந்து வாள், கூரிய ஆயுதங்களால் வெட்டியும் குத்தியும் கொலை செய்த சம்பவங்கள் பல நடந்தன. இது ஊர்காவல் படைக் கிராமங்களை மேலும் பலப்படுத்தியது.

ஜெ.ஆரால் போடப்பட்ட இந்தப் பாதுகாப்பு வேலிக் கிராமங்கள் ஊர்காவல் கிராமங்களாக இன்றுமுள்ளன. அரசதலைவர் ரணில் விக்கிரமசிங்க ஊர்காவல் படையினரின் நிகழ்வொன்றில் அண்மையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஊர்காவல் படைகள் ஒருபோதும் கலைக்கப்பட மாட்டாது என உறுதியளித்தார். தனது மாமனாரால் உருவாக்கப்பட்ட ஊர்காவற்படையை ரணில் தொடர்ந்தும் பேணி வருகிறார். சிங்கள அரசுகள் அந்தக் கட்டமைப்பைக் கட்டிக்காத்து வருகின்றன. ஆனால், போருக்குப் பின்னர் தமிழர்களுக்குத் தலைமை தாங்கிவரும் தலைவர்களின் ஆளுமைக் குறைபாடும் அவர்தம் செயற்பாடுகளும் தமிழர்களுக்கு எவ்விதத்திலும் உதவவில்லை.

**தொன்மைகளையும், பூர்வீக வேலைப்பாடுகளையும், பழமையையும் அழித்துப் புதிய கோபுரங்கள், கோவில்களுக்கான கட்டடங்கள் எனக் கட்டிய பணத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் கோவிலைச் செம்மைப்படுத்தவோ, கட்டவோ பயன் படுத்தியிருக்க வேண்டும்**

### றியர் அட்மிரல் சரத் வீரசேகர

கடற்படைத் தளபதிகளில் ஒருவராக இருந்த சரத் வீரசேகர ஊர்காவல் படையின் தலைமைத் தளபதியாகக் கடமையாற்றியவர். தற்போது நாடாளுமன்றில் தமிழருக்கு எதிராகப் பல சர்சைமிக்க கருத்துக்களை வெளியிட்டுவருகிறார். ஊர்காவல் படையின் தலைமைப் பதவியிலிருந்த போது தனக்குக் கீழிருந்த ஊர்காவல் படையினரையும் அவ்வாறே தமிழருக்கு எதிராக வழிநடத்தியிருந்தார். ஊர்காவல் படையினரின் வாழ்க்கையை மையமாக வைத்து ஹாமினி என்ற பெயரில் சிங்களத் திரைப்படம் ஒன்றையும் இயக்கியிருந்தார்.

### போரின் பின்பான மீள்குடியேற்றம்

எல்லைகள் எம்மை நோக்கி வரும் என ஜெ.ஆர். சிங்கள மக்களுக்குக் கூறியிருந்த நிலையில் 2009க்குப் பின் அரசியலுக்கு வந்த தமிழ் அரசியல்வாதிகள் சிங்கள ஆக்கிரமிப்பு ஏற்பட முன்னர் எல்லைப்புறக் கிராமங்களில் தமிழ் மக்களை மீள்குடியேற்றத் தவறிவிட்டனர். எல்லைப்புறக் கிராமங்களைக்க கவனிக்கவும் பாதுகாக்கவும்கூடத் தவறினர். வன்னி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாணசபை இயங்கிய காலத்தில் அதன் பிரதிநிதிகளாக இருந்தவர்கள், அமைச்சராக இருந்தவர்கள் வெடுக்குநாறி மலைப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களைக் குடியேற்றியிருக்க வேண்டும். அப்படி எதுவும் நடக்கவில்லை. அவர்கள் அதுபற்றி யோசிக்கக்கூடவில்லை.

### கோவிலை ஏன் கட்டவில்லை...?


யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் இதுவரை காலமும் நல்ல நிலையிலிருந்துவந்த இந்துக் கோவில்களை அடியோடு அகற்றிவிட்டுப் புலம்பெயர் மக்களின் பணத்தில் புதிய கோவில்கள் கட்டப்பட்டன. தொன்மைகளையும், பூர்வீக வேலைப்பாடுகளையும், பழமையையும் அழித்துப் புதிய கோபுரங்கள், கோவில்களுக்கான கட்டடங்கள் எனக் கட்டிய பணத்தைத் தமிழ் அரசியல்வாதிகள் வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் கோவிலைச் செம்மைப்படுத்தவோ, கட்டவோ பயன் படுத்தியிருக்க வேண்டும். அதே வேளை அந்தக் கோவிலின் பெயரில் அந்தச் சூழலில் ஒரு வீட்டுத்திட்டத்தையும், கிராமிய உட்கட்டமைப்பையும் மேற்கொண்டிருக்க முடியும். யாழ்ப்பாணம் சிவபூமி என்று தற்போது கோசம் போடுபவர்களும், ஆங்காங்கே சிலைகளை நிறுவுபவர்களும் வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் கோவிலைக்

கட்டும் பணியை முன்னெடுத்திருக்க முடியம். இந்திய இந்துத்துவப் பின்னணியில் செயற படும் இவர்கள் குறைந்தது இந்திய அரசிட மாவது இதற்கான உதசியைப் பெற்றிருக்க முடியும் (தற்போது பதவியிலிருக்கும் பா.ஜ.க. அரசு சிவன் கோவில்களைக்கட்டுவதில் முன் னின்று செயற்படுகிறது). ஆனால், அப்படி எந்த முன்னேற்ற முயற்சிகளும் தமது கைவசம் இல்லாமல் தமிழ்த் தலைவர்களும், இந்துத்துவ வாதிகளும் இருக்கின்றனர். இத்தகைய சூழலில் ஜெ.ஆர். அன்று சிங்கள மக்களுக்கு கூறியதையே தமிழ் மக்களுக்கு இன்று கூறவேண்டியுள்ளது. நாம் எல்லைகளை நோக்கிச் செல்லாததால் எல்லைகள் எம்மைநோக்கி வந்துவிட்டன. தமிழர் மத்தியில் காணப்படும் ஒற்று மையின்மையும் தூரநோக்கின்மையுமே ஆதிலிங்கேஸ் வரர் ஆலயம் சிதைக்கப்பட்டமைக்கு முக்கிய கார ணங்கள்.

**இப்போது கோவில் எச்சங்கள் சிதைக்கப்பட்ட பின்னர் தமிழ் அரசியல் வாதிகளையும் சட்டத்தரணிகளையும் அந்தப் பக்கம் காணவில்லை.**

### தமிழ் வரலாற்றாசிரியர்களின் பங்கு

வழமையான வரலாற்று எச்சங்களைக் கண்டுபிடித்த தும் அவை இத்தனை நூற்றாண்டுகள் பழமையானவை என்று கூறுவதோடு தமது கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கின்றனர் தமிழ் வரலாற்றாசிரியர்கள். ஆதிலிங் கேஸ்வரர் கோவில் எச்சங்களை வைத்து அவற்றைப் மறுசீரமைத்து எதிர்காலத்துக்குரிய வரலாற்று அணுகுமு றையை இவர்களே ஏற்படுத்திக் கொடுத்திருக்க வேண் டும். அதற்கான திட்ட முன்மொழிவுகளைத் தமிழ் நாடா ளுமன்ற உறுப்பினர்களுக்குச் சமர்ப்பித்திருக்கவும் வேண்டும். ஆனால், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. பல்கலைக்கழக வரலாற்றுத் தரப்பினர் அரசின் தயவு தாட்சண்யம், பதவி, சலுகைகளுக்காக இது விடயத்தில் பெருமெடுப்பில் வாய் திறப்பதும் இல்லை.



### அரசியல்வாதிகளும் சட்டத்தரணிகளும்

வெடுக்குநாறி மலைப்பிரச்சினை எழுந்த ஆரம்பத்தில் தமிழ் அரசியல்வாதிகளும், சட்டத்தரணிகளும் அங்கு போய்ப் படையினருடன் மல்லுக்கட்டி ஊடகங்களில் தமது வீரத்தைப் பதிவு செய்தார்கள். அதற்காக அங்கு புறப்பட முன்னர் அங்கு செல்ல வாகன வசதியும் தமது வங்கிக் கணக்குக்குப் புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து பணமும் கிடைத்துவிட்டதா என்பதை உறுத்திப்படுத்திய பின்னரே அந்த இடம்நோக்கிப் படையெடுத்தார்கள். இப்போது கோவில் எச்சங்கள் சிதைக்கப்பட்ட பின்னர் அவர்களை அந்தப் பக்கம் காணவில்லை. இது சிவபூமி என்று அவ்வப்போது அடித்துக்கூறும் மறவன்புலவு சச்சிதானந்தன் கூட யாழ்ப்பாண நகரில் ஒரு சிறு அதிர்வை ஏற்படுத்திவிட்டு அமை தியாகிவிட்டதாகத் தெரிகிறது.

### வீடமைப்புத் திட்டம்

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றும் குடும்பத்துக்கு 5வீடுகள் என்ற அடிப்படையில் வெடுக்குநாறி மலையை அண் மித்த பகுதிகளில் வீடுகளைக் கட்டிக்கொடுத்திருந்தால்கூட அங்கு பல வீடுகள் இன்று உருவாகியிருக்கும். மாதத்துக்கு ஒரு கட்சி என்று பிரிந்து பிரி ந்து உருவாக்கி அதிக கட்சிகள் தோன்றியிருக்கும் நிலையில் ஒரு கட்சி 5 வீடுகளைக் கட்டி னால் கட்சிகளைப் பெருக்கியது போல அங்கு வீடுகளைப் பெருக் கியிருக்க முடியும். ஆனால், அங்கு வாழ்ந்த மக்களுக்கு எதுவும் இல்லை என்ற நிலையே உருவாகியிருக்கிறது.


அந்தப் பகுதியில் படையி னரின் வசமுள்ள 250ஏக்கர் நிலத்தை பொதுமக்களுக்கு வழங்க அண்மையில் சம்மதம் தெரிவித்திருந்தார் ரணில் விக்கிரமசிங்க. ஆனால், சிங்கள அரசுகளின் எல்லை நோக்கிய நகர்வைத் தடுப்ப தற்கு அந்த எல்லைகளை நோக்கிச் செல்லப் போதியளவு மக்கள் தமிழர்கள் மத்தியில் இல்லை. இதுவே மிக முக் கிய யதார்த்தமாகும்.

ஜேம்ஸ் ரி.இரத்தினம்

# நீலப்பெருமாள் பரம்பரையும் தம்பி முதலியின் உரிமையும்

(எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆகியோரின் தமிழ் மூலத்தைக் குறிப்பிடும் கட்டுரைகளின் தொகுப்பு)

02




(கடந்தவாரத் தொடர்ச்சி)

அவர் 1790 மே மாதம் 19ஆம் திகதி விண்ணுல கெய்தினார். அவருடைய சமாதியும் தற்போது ஆட்டுப்பட்டித்தெரு டச்சுத் தேவாலயத்தில் உள்ளது. எனினும் அது கசானா ஸ்க்ரோப்பின் சமாதி அருகில் இல்லை. ஆரம்பத்தில் அச்சமாதியும் கொழும்பு கோட்டை டச்சு தேவாலயத்தில் நிறுவப்பட்ட தற்கான சான்றுகள் உள்ளன.

ஒல்லாந்தில் கல்வி கற்ற ஹென்ரிக்கஸ் பிலிப்ஸ் போதகர் மிகச் சிறந்த கிறிஸ்தவ அறிஞராவார். அவருடைய தகப்பனார் டச்சு ஆட்சிக்காலத்தில் முதலியாகப் பணிபுரிந்தவர். பாட்டனார் டி.பிலிப்ஸ் எனும் ஆசிரியராவார். மதபோதகர் பிலிப்ஸின் சகோதரரான ஏப்ரகாம் பிலிப்ஸூம் டச்சு ஆட்சிக் காலத்தில் மஹா முதலி ஆகப் பணி புரிந்தவர்.

சேர் எலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் உயர்நீதியரசராகப் பணி புரிந்த சமயத்தில், அவருடைய மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிய ஜொஹான்ஸ் கொட்பிரைட் பிலிப்ஸ் முன்னர் குறிப்பிட்ட ஏப்ரஹாம் பிலிப்ஸின் புதல்வர் ஆவார். 1834ஆம் வருடம் அரச சட்டப் பேரவைக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட முதலாவது சிங்கள உறுப்பினர் இவரேயாவார்.

1900 ஜூலை நான்காம் திகதி இவர் காலமானார்.

ஜொஹான்ஸ் கொட்பிரைட் பிலிப்ஸ், சேர் எலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டனுக்கு எழுதிய கடிதம் ஒன்று என்னிடமுண்டு. 'என்னைப் பாதுகாக்கும் உத்தமரே'என விளித்து எழுதப்பட்ட நீண்ட கடிதம் அது. அக்கடிதம் ஜோன்ஸ்டன் சேகரித்து வைத்திருந்த கடிதங்களோடு இருந்தது. நான் 1954ஆம் வருடம் இங்கிலாந்தில் இருந்தபோது அவரிடமிருந்து அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டேன். அக்காலத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளராக விளங்கிய ஏ.குமாரசுவாமியும் பிலிப்ஸின் சம காலத்தவராவார். அரசமைப்புச் சபையின் முதலாவது தமிழ் உறுப்பினராகும் பேறு பெற்றவர் குமாரசுவாமியே. அவருடைய தகப்பனார் ஆறுமுகம்பிள்ளை. அவர் தென்னிந்தியாவின் கருதாவில் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்த

# கிறிஸ்தவ மதத்தைத் தழுவாத எவருக்கும் அந் நாட்களில் பட்டம் பதவி கிடைக்கவில்லை.


வர். குமாரசுவாமிக்குப் பிள்ளைகள் இருவர். சேர் முத்துக்குமாரசுவாமி அவருடைய புதல்வர், செல்லாட்சி புதல்வி, பொன்னம்பலம் குமாரசுவாமி, சேர்.பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகியோரின் தாயார் இந்தச் செல்லாட்சியே.

ஆளுநர் மெட்லண்ட் முதலிமார்களுக்கு அஞ்சி வாழ்ந்ததாகக் கூறப்படுவதுண்டு. இங்கு அச்சம் என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது சாதாரண அர்த்தத்தில் அன்று. தமது எஜமானர்களுக்கு மிகப் பணிவுடன் மரியாதை செலுத்தவும், எப்போதும் புகழ்ச்சியான வார்த்தைகளைப் பயன்படுத்தவும், நண்பர்கள்போல் நடித்துப் புறம் கூறவும் மிகவும் கைதேர்ந்த இந்த முதலி வர்க்கத்துக்கு இணையான ஒரு வர்க்கம் இலங்கையில் இருந்ததில்லை எனச் சமகால அறிக்கைகளில் இருந்து தெரிய வருகிறது. நமது காலத்திலிருந்து முற்றிலும் வேறான ஒரு காலகட்டத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். அதனால் அக்காலச் சூழ்நிலைக்கேற்ப அவர்கள் நடந்தகொண்டார்கள் என ஒருவர் நினைக்கமுடியும். அந்நாட்களில் மத்தியதர வர்க்கம் என்று ஒன்றிருக்கவில்லை. இரு வர்க்கங்களுக்கு மட்டுமே மட்டுப்பட்டிருந்தது. சுரண்டுவோர் சுரண்டலுக்கு இரையாவோர் ஆகிய வர்க்கங்களே அவையாகும். அதாவது ஆளுவோர் மற்றும் ஆளப்படுவோர். ஆளுவோர் பிறநாட்டு எஜமானர்களாக இருந்தனர். ஆளப்படுவோர் சுதேசிய பிரஜைகளாக இருந்தனர்.

இத்தகைய சமூக, அரசியல், பொருளாதார பின்னணியிலயே முதலிமார்கள் தோற்றம் பெற்றார்கள். முதலி பட்டம் பெறுவதற்காகத் தங்களால் இயன்ற எல்லாவிதமான ஏமாற்று வேலைகளையும் செய்தார்கள். அவர்கள் நடைமுறை விடயங்களில் தேர்ந்தவர்களாயிருந்தனர். சமூக அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு முன்னேறிச் செல்வதற்கு அவர்கள் பேராசை கொண்டிருந்தார்கள். அதற்காக எந்தவிதமான தந்திரங்களையும் கைக்கொள்வதற்கு அவர்கள் பின்னிற்கவில்லை. அவர்கள் தம்மைவிட உயர்ந்தவர்களிடத்தே மிகப் பணிவாக நடந்துகொண்டார்கள். குறுகிய மனப்பான்மை, கேடான சிந்தனை, புறம் கூறல் ஆகிய துர்க்குணங்களைக் கொண்டிருந்தனர். முதலிமாரில் மிகப் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்களாக இருந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவ மதத்தைத் தழுவாத எவருக்கும் அந் நாட்களில் பட்டம் பதவி கிடைக்கவில்லை. அதனால் இச்சிறுமதி படைத்தோரின் ஏமாற்று வித்தைகளைத் தெரிந்துகொண்ட ஆட்சியாளர்கள் தமது வாயிலில் நடமாடும் எதிரிகள் குறித்து அச்சம் கொண்டது வியப்பானதல்ல.

இலங்கையின் டச்சு ஆட்சியின் போது, நீதிமன்றங்கள் மற்றும் வருமான வரி தொடர்பான குறிப்புகள் எழுதிய ஹியூ கிலேகன், முதலிமார்கள் குறித்துச் சிறப்பான விவரணம் ஒன்றைத் தந்துள்ளார். டச்சு ஆட்சி வீழ்ச்சி கண்டு, பிரித்தானிய ஆட்சி ஆரம்பமாகிய வரலாற்றின் மிக முக்கிய காலப்பகுதியில் இலங்கையில் பணியாற்றியவர் அவர். முதலிமார்கள் குறித்த அவருடைய விளக்கம் வருமாறு-

"இந்நாட்டுச் சுதேச மக்களின் வறுமை மற்றும் பலகீனம் சம்பந்தமான அடிப்படைக் காரணங்களை ஆராயும்பொழுது முதலிமார்கள் நிலத்தின் மேல் கொண்டிருந்த அநீதியான கட்டுப்பாடே அதற்குக் காரணம் என்பது தெளிவாகிறது. முதலிமார்களின் கருணையின்றி ஒரு சிறிய துண்டு நிலத்தைக்கூட பயிர்செய்ய முடியாத அளவுக்கு அவர்களின் காணியுரிமை முழுமையாகப் பாதுகாப்பற்றாதாகவிருந்தது. முதலிமாரின் விருப்பு வெறுப்புக்கமையவே விவசாயத்திற்கான காணியைப் பெற்றுக்கொள்ள முடியும். முதலிமார்களின் தீர்மானங்களுக்கு எதிராக எனக்குக் கிடைக்கப்பெறும் மனுக்கள் மிகச் சொற்பமே. சிலவேளை முற்றிலுமாகக் கிடைக்கப்பெறவில்லை என்றே கூறலாம். இது முதலிமார்களின் தீர்மானத்தை மதிப்பது என்பதனால் அல்ல. அவர்களின் துஷ்ட பரிபாலனத்தின் பால் மக்கள் கொண்டுள்ள அச்சமே காரணம் என்பதற்குச் சான்றுகள் நிறையவே உள்ளன."



# மன்மத லீலையால் வந்த வில்லங்கமே இது...?

டயஸ்

முழு அமெரிக்காவும் ஆடிப்போயிருக்கிறது...! அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று புருவத்தில் கை வைத்து யோசித்துக்கொண்டிருக்கிறது...! அமெரிக்கர்கள் அனைவரின் பார்வையையும் ஈர்த்திருக்கிறது இந்த விடயம்...! குளிரன அமெரிக்கா இப்போதெல்லாம் சூடாகவேயிருக்கிறது இந்த விடயத்தால்... அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஆபாசப் பட நடிகை ஸ்டோர்மி டானியல்ஸ் இடையிலான பிணக்குத்தான் அந்த விடயம்...! நீதிமன்றில் நிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் வழக்காக ட்ரம்ப்பைப் பதம் பார்க்கக் காத்திருக்கிறது தண்டனை...! இதிலிருந்து தப்பிப்பாரா ட்ரம்ப்...? அல்லது தண்டனைக்குட்படுத்தப்படுவாரா...? இந்த வழக்கு என்னவாக முடிவுக்கு வரப்போகிறது...? எதிர்வரும் அதிபர் தேர்தலிலும் போட்டியிட முற்பட்டிருக்கும் அவருடைய அரசியல் எதிர்காலம்... அவருடைய வியாபார எதிர்காலம்... அவருடைய வாழ்க்கை எல்லாமும் என்னவாகப்போகின்றன...? என் றெல்லாம் பல எதிர்பார்ப்புகளை அமெரிக்கர்கள் மத்தியில் மாத்திரமல்ல அமெரிக்கர்களைத் தாண்டியும் பலரிடத்தே ஏற்படுத்தியிருக்கிறது இந்த விவகாரம். அந்த ஆபாசப் பட நடிகைகூட இந்த விவகாரத்தால் பிரபலமடைந்திருக்கிறார். அவரைத் தேடித் திரிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று இணையத் தளங்களும் அறிக்கை விட்டிருக்கின்றன.



**விவகாரம் என்ன...?**

2016ஆம் ஆண்டில் அமெரிக்கத் தேர்தலில் ட்ரம்ப் குதித்தபோது ஆபாசப் பட நடிகையான ஸ்டோர்மி டானியல்ஸ் ஊடகங்களைத் தொடர்புகொண்டு 2006ஆம் ஆண்டில் ட்ரம்ப்புக்கும் தனக்கும் திருமணத்தைக் கடந்த தொடர்பு இருந்தது என்று பெரும் குண்டு ஒன்றைப் போட்டுடைத்தார். அதுவே ட்ரம்பின் அரசியல் வாழ்வுக்கு வைக்கப்பட்ட முதலாவது ஆப்பாக இருந்தது. அப்போதிலிருந்து இந்த வழக்குக்கு முகம்கொடுத்து வருகிறார் ட்ரம்ப். ட்ரம்ப் தரப்பிலிருந்து 2016ஆம் ஆண்டில் கோடிக் கணக்கில் பணம் வழங்கப்பட்டிருக்கிறது



## இந்த வாரச் சொல்

# எத்தி

"எத்தி" என்கிற இந்தச் சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் வினைச்சொல்லாக வழக்கிலுள்ளது. அதே வேளை பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகிறது.

வீசுதல், ஊற்றுதல் என்றிருக்கிற சொற்களைவிடவும் வேறுபட்ட அர்த்தத்தைத் தமிழில் வெளிப்படுத்துவதாக இந்தச் சொல் இருக்கிறது.

'அவனுக்கு ஆரோ தூளைக் கரைச்சுக் கண்ணுக்குள்ள எத்திப்போட்டாங்களாம்'

'நான் போகேக்க குளத்தில தண்ணி எத்தி விளையாடிக் கொண்டிருந்தவங்கள்"

'ஏதோ சண்டடையில அவனுக்கு மனிசிக்காரி குழம்பால எத்திப்போட்டாளாம்'

'பள்ளிக்கூடப் பொடியள் நீலத்தைக் கரைச்சு வெள்ளை உடுப்பில எத்தி விளையாடினதால அதிபர் அடிச்சுப்போட்டாராம்'

'இனியும் ஏதாவது கதைச்சால் சுடுதண்ணியால எத்திவிடு'

"அவள் றோட்டிலை நடந்து போகேக்க மோட்டச் சைக்கிளில வந்த ரெண்டுபேர் அவளின்ர முகத்தில அசிட் எத்தியிருக்கிறாங்கள்"

என்றும் அந்த நடிகையுடனான தனது தொடர்பை மறைப்பதற்காகத் தனது வழக்கறிஞர் மூலமாக அவருக்கு மேற்குறிப்பிட்டளவு பணத்தை ட்ரம்ப் வழங்கினார் என்று சொல்லப்படுகிறது. அதிபர் செல்வாக்குடன் இருந்தபோது ட்ரம்ப்பை நெருங்காத குறித்த வழக்கு இப்போது அவரது கழுத்தைச் சுற்றும் பாம்பாகியுள்ளது. தனது வழக்கறிஞருக்கு ட்ரம்ப் வழங்கிய பணம் வழக்கறிஞருக்குரிய கட்டணம் என்று ட்ரம்ப் தரப்பு வாதிட்டாலும், மற்றொரு பெண்ணுடன் தனக்குத் தொடர்புள்ளது என்பதைத் தேர்தல் காலத்தில் மறைத்து வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு எடுத்த முயற்சி இது என்று கருதப்பட்டே ட்ரம்ப் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட பெருந்தொகைப் பணம் என்பதால் தனது குற்றச்செயலை மறைக்கவோ, வாக்காளர்களுக்கு விடயத்தைத் தெரியப்படுத்தாமல் தவிர்க்கவோ ட்ரம்ப் எடுத்த முயற்சியாக இந்தப் பணப்பரிமாற்றம் கருதப்படுகிறது. இதனால் தற்போது ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வழக்கில் அவர் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது....!



**அரசியல் பழிவாங்கல்**

இது அரசியல் ரீதியில் தன்னைப் பழிவாங்கும் முயற்சி என்று ட்ரம்ப் தரப்பு சொல்கிறது. அரசியலில் இருந்து தன்னை ஓரங்கட்டச் செய்யவும் தனது அரசியல் எதிர்காலத்தின் மீது கறை ஏற்படுத்தவும் அரசியல் ரீதியாகத் தன்மீது சுமத்தப்படும் பழியே இது என்கிறார் ட்ரம்ப். அரசியல் துன்புறுத்தல் என்று இதற்குத் தலைப்பிட்டுக் குறிப்பிடுகிறார் அவர். அமெரிக்காவின் மான்ஹாட்டன் நீதிமன்றத்தில் சென்று ட்ரம்ப் சரணடையவேண்டிய நிலைக்கு அவரை இந்த வழக்குக் கொண்டுவந்திருக்கிறது என்றும் அமெரிக்க ஊடகங்கள் கருத்துவெளியிடுகின்றன. ட்ரம்ப்புக்குக் கைவிலங்கிட்டுச் சிறையில் அடைக்கப்படுவார் என்றும் எதிர்வு கூறப்படுகிறது. குற்றவாளியாக அறிவிக்கப்பட்டால் அதிகபட்சமாக 4 ஆண்டுகள் சிறைத்தண்டனைக்கும் வாய்ப்பிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எது எப்படியிருப்பினும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் இந்த வழக்கின் முடிவை. சக்திமிக்க ஒரு பெரும் நபரை, அரசியல் பிரமுகரை, அசைக்கமுடியாத பெருந் தொழிலதிபரை நிலைகுலையச் செய்திருக்கிறது இந்த வழக்கு...!

# இந்த வார சமையல்



# சுட்ட கத்தரிக்காய்ச் சம்பல்

யாழ்ப்பாணத்தவரின் உணவில் கத்தரிக்காயின் பங்கு முக்கியமானது. பாற்கறி, சம்பல், பொரித்துக் குழம்பு, கடலையுடன் பிரட்டல் கறி எனக் கத்தரிக்காய்க்கென்று வகை வகையான சமையல் முறைகள் உள்ளன. யாழ்ப்பாணத்து மட்டுவில் கத்தரிக்காய் என்று கத்தரிக்காயின் பூர் வீகமாகக்கூட யாழ்ப்பாணம் இருக்கிறது. இத்தகைய காரணங்களால் யாழ்ப்பாணத்தவர்களின் கறி மற்றும் உணவுகளில் தவிர்க்கப்பட முடியாததாகக் கத்தரிக்காய் இருக்கிறது. அத்தகைய கத்தரிக்காயை அவித்து, பொரித்து உணவாக்குவது பற்றிப் பலரும் தெரிந்திருந்தாலும் அதைச் சுட்டுச் சம்பலாக்குவது பற்றி அநேகர் அறியாதிருக்கின்றனர். அந்த வகையில் இந்த வாரம் சுட்ட கத்தரிக்காயில் சம்பல் ஆக்குவது எவ்வாறு என்று பார்ப்போம்.



**தேவையான பொருள்கள்**

கத்தரிக்காய் - கால் கிலோ
சின்ன வெங்காயங்கள் - 100கிராம்
பச்சை மிளகாய் - 5
செத்தல் மிளகாய் - 3
தேங்காய்ப்பால் - 2 மேசைக் கரண்டி
மிளகுதூள் - 1/4தேக்கரண்டி
கடுகு, பெருஞ்சீரகம் - 2தேக்கரண்டி
தேங்காய் எண்ணை - 2மேசைக்கரண்டி
தேசிப்புளி - பாதியினது
கறிவேப்பிலை, உப்பு ஆகியன தேவைக்கேற்ப

**எப்படிச் செய்வது...?**

கத்தரிக்காய்களை அடுப்பு நெருப்பில் சுட்டு எடுத்துக் கொள்ளுங்கள். இதற்காகக் கத்தரிக்காய்களின் மேற்புறத்தில் எண்ணை தடவி, அவற்றை அலுமினியத் தாள்களில் சுற்றி அடுப்புத் தீயுக்குள் போட்டு எடுப்பது, மைக்ரோ அவன் எனப்படும் மின்சாதனத்துக்குள் வைத்து எடுப்பது, இல்லாவிடின் மின் அடுப்புக்கு மேல் வைத்துச் சுட்டு எடுப்பது என்று பலர் பல வழிகளில் சுட்டுக் கொள்கிறார்கள். ஆனாலும் விறகடுப்புக்குள் நெருப்புத் தணல்களுக்குள் புகுத்திச் சுட்டெடுப்பதே ஆரோக்கியமான வழிமுறையாகப் பலரும் விரும்புகிறார்கள். பெருமெடுப்பில் செய்வதற்கு இந்த வழிமுறை கடினமானதாக இருந்தாலும் சிறிய அளவில் செய்யச் சிறந்தது இதுவே. விரும்பியோர் தமது வசதிக்கேற்ப முறைகளில் கத்தரிக்காயைச் சுட்டு எடுத்துக்கொள்ளுங்கள்.

சுட்ட கத்தரிக்காய்களின் தேலை உரித்து நீக்குங்கள். பின்னர் அவற்றைக் கத்தியால்

துண்டுகளாக நறுக்கிக் கொள்ளுங்கள். பாத்திரம் ஒன்றில் இட்டு 50 கிராம் அளவில் சின்ன வெங்காயத்தை நறுக்கிப் போட்டுக் கொள்ளுங்கள். அதனுடன் நறுக்கிய பச்சை மிளகாய், உப்பு, தேங்காய்ப்பால், சீரகம் ஆகியவற்றைப் போட்டுப் பிசைந்துகொள்ளுங்கள். பின்னர் தாச்சி ஒன்றை அடுப்பில் வைத்து அதில் தேங்காய் எண்ணையை விட்டு 50கிராம் அளவில் வெங்காயத்தை நறுக்கிப் போட்டு அதனுடன் கறிவேப்பிலை, கடுகு, செத்தல் மிளகாய்களை நறுக்கி இட்டுத் தாழித்தெடுங்கள். தாழித்த கலவையைப் பிசைந்து வைத்திருக்கும் கத்தரிக்காய்க் கலவையுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். உப்பைச் சரிபார்த்துத் தேசிப் புளி சேருங்கள். சுவையான சுட்ட கத்தரிக்காய் சம்பல் தயார்.



# விடுதலை

## பார்க்கவும் பாராட்டவும் தக்க சினிமா

வெற்றிமாறன் இயக்கத்தில் சூரி, விஜய் சேதுபதி மற்றும் பலரின் நடிப்பில் வெளியாகியிருக்கிறது 'விடுதலை' . இந்திய எழுத்தாளர் ஜெயமோகன் எழுதிய துணைவன் என்ற சிறுகதையை விரிவாக்கம் செய்து படமாக்கியிருக்கிறார் வெற்றிமாறன். 1980களில் இந்தியாவின் தமிழ்நாட்டில் நடந்த சில சம்பவங்களின் தொகுப்பாக இருக்கிறது படத்தின் கதை என்று பலர் சொல்கிறார்கள். ஆனாலும் இது ஒரு கற்பனைக் கதை என்று படத்தின் ஆரம்பத்தில் படக்குழு காட்சிப்படுத்துகிறது.

**கதை**

அருமபுரி என்ற மலைக்கிராமத்தில் நிறையக் கனிம வளங்கள் உள்ளது. அதை அகழ்ந்தெடுப்பதற்காக அங்கு சுரங்கம் தோண்டுவதற்குப் பன்னாட்டு நிறுவனம் ஒன்றை அனுமதிக்கிறது அரசு. அங்கு சுரங்கம் தோண்டப்படுவதை எதிர்த்துப் பெருமாள் வாத்தியார் (விஜய் சேதுபதி) தலைமையிலான மக்கள் படை என்ற பயங்கரவாத அமைப்பு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கிறது. அந்த அமைப்பை முடக்கவும், அதன் தலைவரான விஜய் சேதுபதியைக் கைது செய்யவும் காவல்துறை அணி ஒன்று தயார்ப்படுத்தப்பட்டுச் செல்கிறது. காவல்துறை அணியின் வாகன ஓட்டுநராக இருக்கிறார் குமரேசன்(சூரி). அரசுக்காகவும் காவல்துறைக்காகவும் தன்னை அர்ப்பணித்துப் போராட வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கு செல்கிறார். களத்துக்குச் சென்றபின்னர் பயங்கரவாதிகள் பக்கம் நியாயம் இருப்பது அவருக்குத் தெரியவருகிறது. கூடவே காவல் துறையும் அரசும் தான் அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுமைகள் இழைக்கின்றர் என்றும் தெரியவருகிறது. இதனால் காவல் துறையின் பக்கமா? பயங்கரவாதிகளின் பக்கமா நிற்பது என்பதில் அவருக்குக் குழப்பம் ஏற்படுகிறது. முடிவில் அவர் எந்தப் பக்கம் நின்றார்...? அதனால் அவருக்கு ஏற்பட்ட விளைவுகள் என்ன? என்பதெல்லாம்தான் மீதிப் படம்.

படத்தின் ஆரம்பத்தில் மிகப் பெரிய ரயில் விபத்து ஒன்று நடக்கிறது. அதைத் தொடர்ந்து பெருமாள் வாத்தியார் தலைமையில் இயங்கும் மக்கள் படையை முடக்கவும் அதன் தலைமைகளைச் சுட்டுக் கொல்லவும் கட்டளை பிறப்பிக்கப் படுகிறது. அதற்காக அமைக்கப்படும் சிறப்புக்







காவல் படையின் வாகன ஓட்டுநர்தான் குமரேசன். சிறப்புப் படையில் மேலதிகாரியால் துன்புறுத்தப்படும் குமரசேன், அந்த மலைக் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவரைக் காதலிக்கத் தொடங்குகிறார். ஒரு கட்டத்தில், அந்த கிராமத்தில் உள்ள பெண்கள் அனைவரையும் பிடித்து வந்து பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குகிறார்கள். அதில் குமரேசனின் காதலியும் இருக்கிறார். உயர் அதிகாரியின் உத்தரவுகளைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் சூரிக்குத் தனது பணியைத் தொடரத் தடங்கல் ஏற்படுகிறது. ஆனால், பணியைத் தொடரும் முயற்சியில் இறங்குகிறார் சூரி. அதற்காகப் போராடும் சூரியின் நிலை என்னவானது? விஜய் சேதுபதி பிடிப்பட்டாரா? சூரிக்கும் விஜய் சேதுபதிக்கும் என்ன தொடர்பு என்பதே படத்தின் மீதிக் கதையும் முதல் பாகத்தின் கதையும்.

காவலர்களின் பார்வையிலும், பிறகு காவலர்களால் பாதிக்கப்படும் மலைக்கிராம மக்களின் பார்வையிலுமாகக் கதை நகர்கிறது.

**பாத்திரங்கள்**

விடுதலை படம் குறித்த அறிவிப்பு வெளியான போதே அனைவரும் ஆச்சரியமாகப் பார்த்த ஒன்று, வெற்றிமாறன் படத்தில் சூரி கதாநாயகனாக நடிப்பது தான். விசாரணை மற்றும் தனுசின் நடிப்பில் சில படங்கள் என வெற்றிப் படங்களை அளித்த வெற்றிமாறனின் இயக்கத்தில் நகைச்சுவை நடிகனான சூரி முத்திரை பதித்திருக்கிறார். காவல்துறை ஊழியராக சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தில் சூரி வாழ்ந்து இருக்கிறார், விஜய் சேதுபதிக்கு குறைவான காட்சிகள் தான். சில காட்சிகளில் வந்தாலும் நிறைவான நடிப்பை அவர் வழங்கி இருக்கிறார்.

**இசை, படத்தொகுப்பு**

இளையராஜாவின் இசை பக்கபலமாக இருக்கிறது. ஒளிப்பதிவாளர் வேல்ராஜின் உழைப்புப் படத்துக்குப் பலம் சேர்த்திருக்கிறது. கதை நடைபெறும் மலைக் கிராமத்தை அவரது கமராவின் மூலம் நம்மால் நேரடியாக உணர முடிகிறது. படத்தின் ஆரம்பத்தில் வரும் காட்சி முக்கியமாகத் தவறவிடக்கூடாதது. இது படமல்ல, ஒரு கதை அனுபவம்.



# மீட்பு...

04

துன்பானந்த சுவாமி

மரபணு மாற்றிய மரக்கறிகளையும் பழமரங்களையும் முன்யோசனையின்றி பெருமளவில் பொருளாதாரம் இலகு என்று கருதி பாரம்பரியமான எமது மண்ணுக்கேயான நீடித்துப் பயன்தரும் மரக்கறி மற்றும் பழ இனங்களையும் நாமாகவே அழித்துவிட்டோம். மரபணு மாற்ற விதை, பசளை, பூச்சிவிரட்டியென எல்லாவற்றையும் வெளியாரிடம் கையேந்திப் பெறவேண்டிய நிலைக்கே வந்து நிற்கிறோம். ஆக மொத்தத்தில் எம்மிடமிருந்த தனித்துவங்களையும் ஆரோக்கியத்தையும் மட்டுமல்ல பொருளாதாரத்தையும் இழந்திருக்கிறோம்.

முக்கனிகள் எனக்கொண்டாடுகிற கனிகள் தொடக்கம் அத்தனை பழங்கள் தொடக்கம் இயற்கையாக எம்மண்ணில் செழிப்பாகக் கிடைத்த கனிகள் எல்லாமே இப்போது எட்டாக்கனிகளாகிவிட்டன. தாராளமாகக் கிடைக்கிறதுதானே? என்று கூறுவீர்கள். கிடைக்கின்றன. அன்றைய பழங்களது சுவை ஆரோக்கியம் மற்றும் தாராளம் கிடைக்கிறதா? இல்லையே?

இன்றைய பழங்கள் மரபணு மாற்றப்பட்ட தாவரங்களது பெறுதிகள். அவற்றினது தாய்த் தாவரங்கள் தொடக்கம் அவற்றுக்கான ஊட்டம் பூச்சிவிரட்டிகள் என எல்லாமே செயற்கை இரசாயனங்கள்தான். அது தவிர பூ காயாவது காய் பழுப்பது பழுத்தபழம் பழுதடையாதிருப்பது என நீளமானதொரு செயலொழுங்கு முற்றிலும் இரசாயன மயமானதாகவே இருக்கிறது.



பழங்களது தரம் எப்படி இருக்கும்? அவற்றை உண்பதால் நாம் எதிர் பார்க்கிற நேர்விளைவுகளைவிட எதிர்மறை விளைவுகளே கிடைக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது.

நாம் உண்பவை ஆரோக்கியத்திலிருந்து மிகமிகத் தொலைவிலிருக்கின்றன என்பதற்கப்பால் விதை முதல் உண்ணும்வரையான அத்தனை செயற்பாடுகளுக்குமான செலவு என்பது அனேகமாக முழுவதுமே நாட்டுக்கு வெளியேயுள்ள ஒருவனையே வருமானமாகச் சென்றடைகிறது என்கிற உண்மையை உணர மறுக்கிறோம். மறுவழமாக எமது மண் தனக்குச் சொந்தமல்லாத தாவரங்களாலும் முற்றும் அன்னியமான ஆபத்தான இரசாயனங்களாலும் செத்துக்கொண்டிருக்கிறது.

மண் மட்டுமா சாவடைகிறது? மண்ணுக்கே உரித்தான பாரம்பரிய தாவரங்களும் நன்மையையே வழங்கிக்கொண்டிருந்த ஏராளம் உயிரினங்களும் சேர்ந்தல்லவா அழிந்து போகின்றன? மண்புழு இல்லை. மயிர்க்கொட்டி பல்கிப் பெருகுகிறது. காரணம் செண்பகம் மற்றும் ஏழு சகோதரிகள் என்கிற புலுணி இல்லை. தும்பி இல்லை. தவளை இல்லை. பாம்புகள் குறைந்ததால் எலிகள் கூடுகின்றன. என்று பட்டியலை மிக நீளமாக விரிக்குமளவில் நற்சீவனுகள் அழிய தேவையற்றன பெருகுகின்றன. காரணம் நாமும் எமது முன்யோசனையற்ற அவசர செயற்பாடுகளும்தான்.

அவசர செயற்பாடு எனும்போது குறிப்பிட வேண்டிய முக்கியவிடயம் அவசர (ஆரோக்கியமற்ற) உணவுப் பழக்கம், காலங்குறைவான ஆயுள் கொண்ட தாவரங்கள் எல்லாம் எமது ஆயுளைக் கணிசமாகக் குறைத்துள்ளது. அவசர உலகினது விரைவும் உயிரையும் ஆரோக்கியத்தையும் அதிகமதிகம் விபத்து எனும் வடிவில் ஆயுளைத் தொலைக்கிறது. இதனை பின்பொரு முறை பேசலாம்.

உணவுப் பழக்கவழக்க மாற்றமென்பதில் நாகரீகத்தினது செல்வாக்கு என்பது அறிவியலை நிராகரித்துக் கொண்டு முன்னிற்கிறதை யாராலும் மறுக்க முடியாது. கூழ் என்கிற திரவஉணவானது நிறையுணவாகவே முன்னர் எமது முன்னோரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையான அனைத்து போசணைக் கூறுகளையும் ஒன்றிணைத்து தயாரிக்கப்பட்டது என்பதுடன் பஞ்சகாலத்தில் உடலை வலுவாக உழைக்கும் திறனுடன் ஆரோக்கியமாகப் பேணுவதற்கான மூலோபாய உணவாகவும் இருந்துள்ளது.

இன்று...? கூழ் நானும் குடிக்கிறேன் என்று தன்படமிடுவதற்கான ஒன்றாகிவிட்டது. கூழ் அனேகமாக அல்லது முழுமையாக ஒரு விரைவுணவினது (பாஸ்ற்பூட்) நிலைக்குத் தரமிறக்கப்பட்டுவிட்டது. அன்றைய கூழிற்கான சேர்மானங்கள் இன்று பெருமளவில் இல்லை. அவசர செயற்கைச் சுவையூட்டிகளுடன் கூட்டுச்சேர்க்கப்பட்ட பதப்படுத்தப் பட்ட சரக்குகளே இன்றைய கூழைத் தீர்மானிக்கின்றன.

அவ்வாறே கொழுக்கட்டையினது நிலைமையும் ஆகிவருகிறது. ஆடிக் கொழுக்கட்டையென்பது வரலாற்றாளர்கள் குறிப்பிடுகிறதிலிருந்து தூரவாகவே இன்று இருக்கிறது. அன்று அனைத்து வகையான தானியங்களையும் இடித்தோ அரைத்தோ பெற்ற மாவுடன் பனங்கட்டி அல்லது சர்க்கரை சேர்த்துப் பிசைந்து கைகளால் பிடியாகப் பிடித்து அவித்து உண்ணப்பட்டிருக்கிறது. அதுவும் பஞ்சகாலத்தில் ஆரோக்கியம் பேணுவதற்கான ஏற்பாடாகவே இருந்திருக்கிறது. இன்று பொங்கல் பொதிபோன்று கொழுக்கட்டைப் பொதி வாங்கி தயாரிக்கும் நிலைக்கு வந்திருக்கிறோம். பொதி உணவு என்றால் பதப்படுத்தல் இரசாயனச் சேர்க்கையின்றி இருப்பது சாத்திய மற்றதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. பேசலாம்... நிறையவே உண்டு.



# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?



47

## ஏன் வெடி கொழுத்துகிறார்கள்...?

இப்போதெல்லாம் கோவில் திருவிழாக்கள், திருமண, பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப் புகுவிழா ஆகிய தருணங்களில் வெடி கொழுத்துவது என்பது நடைமுறையாகிவிட்டது. அதிலும் குறிப்பாக இறப்பு வீடுகளில் இந்த வெடி அட்டகாசம் தாங்க முடியாத இம்சையாகியிருக்கிறது. மதுபோதையில் உள்ள குழுவினரின் கைகளில் வழங்கப்பட்டிருக்கும் அந்தப் பணியால் பலரும் பாதிக்கப்படுகின்றனர். வெடி கொழுத்துவது என்பது மரியாதை, சடங்கு, பண்பாடுகளின் நிமித்தம் செய்யப்படும் காரியம் என்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது...! ஆனால், உண்மை என்ன? ஏன் வெடி கொழுத்துகிறார்கள்...?

முன்னைய காலத்தில் தொற்றுநோய்கள் பற்றிய புரிதல் மக்களிடம் இருக்கவில்லை. திருவிழாக்கள் இறப்பு வீடுகள், திருமண வைபவங்கள், பொது நிகழ்வுகள் எனப் பல இடங்களில் மக்கள் கூடுவதால் தொற்றுநோய்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க வெடிகளைப் பயன்படுத்தினர். வெடி கொழுத்துவதன்மூலம் காற்றில் கந்தகத்தைப் பரவவிட்டுக் கிருமிகளை அழிக்க வழி செய்யப்பட்டது.

பின்னாட்களில் இந்த நோக்கம் தெரியாமல் அது ஒரு சடங்காகவும் நடைமுறையாகவும் ஆக்கப்பட்டு விட்டது. தற்போது திருவிழா, இறப்புவீடு, திருமண வைபவங்கள் என எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கௌரவத்துக்காக அதிக வெடிகளைக் கொழுத்திப் போடுகின்றனர். இதனால் பலர் பாதிக்கப்படுவது மாத்திரமன்றிக் காற்று மாசு அதிகம் ஏற்படுகிறது. இதைவிட பாரிய சத்தங்களும் எழுப்பப்படுகின்றன. தற்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பின்னர் வெடி கொழுத்திக் கந்தகத்தைக் காற்றில் பரவ விடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், சிலரின் கீழ்மையான மனக்கிளர்ச்சிக்காகவும், ஒரு வித கிளு கிளுப்புணர்வுக்காகவும் இந்த வெடிகொழுத்துதல் பெரும் பிரச்சினையாக வியாபித்திருக்கிறது.

தற்போதைய சூழலில் அதிக வெடிப்பாவனைகளால் விபத்துகள், உயிரிழப்புகளும், அங்க இழப்புகள், சொத்திழப்புகள்கூட ஏற்படுகின்றன. வெடி கொழுத்தும் வழக்கம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொண்டால் வெடி கொழுத்துவதைப் பெருமளவுக்குத் தவிர்க்க முடியும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.04.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781